DEPOSITION OF WITNESS.

(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 494 / 2025

Deposition of PW2 / LW 9

| | |
|---|---|
| Name | : திரு. தாமரைக்கண்ணன் |
| Father's / Husband Name | : பெருமாள்சாமி |
| Village | : கோவிந்தநகரம் |
| Taluk | : கண்டமனூர் |
| Calling | : சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Age | : 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.06.2026

1, 2 ம் எதிரிகள் ஆஜர்.

**அரசுத் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக முதல் விசாரணை :**

1.) நான் தற்போது கண்டமனூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான வேல்முருகன் சார்பு ஆய்வாளர் பணி மாறுதலில் சென்றுள்ளபடியால் அவர்களுடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இந்த வழக்கின் கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2.) கடந்த 25.07.2025 ம் தேதி 1945 மணிக்கு கண்டமனூர் காவல் நிலையத்தில் வேல்முருகன் சார்பு ஆய்வாளர் நிலையப் பொறுப்பில் இருந்த போது க.விலக்கு அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்த தங்கச்சாமி மகன் மலைச்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்பு25.07.2025 ம் தேதி அதி காலை 03.00 மணிக்கு கண்டமனூர் காவல் நிலையம் வந்து கண்டமனூர் காவல் நிலைய குற்ற எண.125/2025 பிரிவுகள் 296(b),115(2),118(1),351(3) BNS பிரகாரம் வழக்கு பதிவுசெய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2**

3.) அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான பாலுச்சாமி மகன் ஆனந்தன் மற்றும் இராஜேந்திரன் மகன் ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர்

மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** .

4.) பின்பு சாட்சிகள் 1 மலைச்சாமி, 2 ஈஸ்வரி 3 செல்வம் 4 இராஜேஸ்வரி , மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்துள்ளார். பின்பு 25.07.2025 ம் தேதி மலைச்சாமிக்கு சிகிச்சை செய்த க.விலக்கு மருத்துவர் யோகேஸ்குமார் என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று கிடைக்பெற்றுள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5.** பின்பு . இவ்வழக்கின் எதிரிகள் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்பு 05.09.2025 தேதி அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட அதே குற்ற பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

வாதியிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எதிரிகளின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் , எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல .

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.06.23 13:34:04 +0530

Judicial Magistrate,
Andipatti.